படையில் செயல்படுகிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு சேல்ஸ்டாக்ஸ், சர்சார்ஜ் வகையில் சுமார் 4 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கத்திலிருந்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 5 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த முறையிலேதான் நாம் மாநகராட்சிப் பணிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்துகள் விற்பனை

*வினா எண். 390—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்துகளை விற்க ஒரு சில மருந்துக்கடைகளுக்கு மட்டுமே அரசு அனுமதியளித்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9·30]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் குழந்தைகளைக் கடுமையாகத் தாக்குகின்ற காரணத்தால் இந்த இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துகளை இலவசமாக ஊர் ஊருக்குச் சென்று கொடுப்பதற்கு ஒரு மருத்துவக் குழுவை அரசாங்கம் அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இப்போது கூட இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழகத்திற்கு மொத்தம் 50 இலட்சகு டோஸஸ் தேவைப்படுகிறது. ஆனால் இப்போது நமக்கு கிடைக்கக்கூடிய டோஸஸ் 9 இலட்சம்தான். இதுதான் இருக்கக்கூடிய பிரச்சினை. நமக்குக் கிடைப்பதிலே ஏறத்தாழ 90 சதவீதம் இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 10 சதவீதம்தான் கடைகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுடைய (Institute of Child Health

என்ற அந்த மருத்துவமனையிலே மட்டுமல்லாமல் எல்லா பெரிய மருத்துவமனைகளிலும் இந்த போலியோ வேக்ஸினேஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த இளம் பிள்ளை வாத மருந்து இலவசமாகக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவி செய்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மத்திய அரசு நிதி ஒதுக்குவது கிடையாது. Hairskin Bioform, Bombay என்ற கம்பெனிதான் இதனைத் தயார் செய்யக்கூடிய இடமாக இருக்கின்றது. அந்த இடத்திலிருந்து எந்தெந்த மாநிலத்திற்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்கலாம் என்று முடிவுசெய்கிறார்கள். அந்த அடிப்படையில் நாமும் வாங்கிக்கொள்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த இளம்பிள்ளை வாதத்திற்கான மருந்து அகில இந்திய ரீதியிலே மத்திய அரசே தயாரித்துத் தருகின்றதா ? அல்லது முற்றிலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அதிலே பங்கு போட்டு நமக்குத் தரப்படுகின்றதா ? இது மிக முக்கியமான மருந்தாக இருப்பதால் இதைத் தமிழகத்தில் உற்பத்தி செய்வதற்கு ஏதாவது அரசு முயற்சி எடுக்குமா! இதற்காக அலோபதி மருந்துமட்டுமல்லாமல் வேறு மருந்துகளையும் பயன்படுத்தி இந்த வியாதியைத் தடுப்பதற்குரிய தகுந்த மருந்துகள் உண்டா என்பதையும் பரிசீலித்து அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, கடைசியாகக் கேட்ட கேள்விக்கு முதலிலே பதிலளிக்கிறேன். அலோபதி முறையினைத் தவிர வேறு முறைகளிலே தடுப்பு ஊசி எதுவும் கிடையாது. ஆனால் நோய் வந்ததற்குப் பிறகு சித்த மருத்துவ முறையிலே எண்ணெய் போடப்பட்டு அதன்மூலம் ஓரளவுக்கு குணப்படுத்துகின்ற வசதி இருக்கின்றது. அடுத்து இன்னொரு கேள்வியினைப் பொறுத்தவரை மத்திய அரசு பொறுப்பேற்றுக்கொண்டு நமக்கு ஒதுக்கீடு செய்கின்றது என்று நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். ஹேர்ஸ்கின் பையோஃபார்மா ஆஃப் பாம்பே என்ற அந்தக் கம்பெனிதான் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அந்தக் கம்பெனி ஒரு பப்ளிக் லிமிட்டட் என்டர்ப்ரைஸ். அந்தக் கம்பெனியினியிடத்திலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று கட்டளையிடுகிறார்கள். அந்த அடிப்படையிலே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்து இந்த மருந்து வெளிநாட்டிலே இருந்து வருகின்றதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு மாதங்களுக்கு முன்பு புரட்சித் தலைவர் அவர்கள் ரோட்டரி க்ளப்பிற்குச் சென்று பேசியதற்குப் பிறகு அங்கே இருக்கக்கூடியவர்கள் இதைப்பற்றி யோசனை செய்யலாம் என்று சொன்னார்கள். ஜனவரி 1 ஆம் தேதி என்று நான் நினைக்கிறேன். அவர்களை அழைத்து அவர்களிடத்திலே கருத்துக்களை எல்லாம் பரிமாறிக் கொண்டதற்குப் பிறகு ஜப்பான் நாட்டிலே இருந்து போலியோ வேக்ஸினேஷன் மருந்தை ஒரு மாவட்டத்திற்கு மட்டும் பரீட்சார்த்தமாகக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி வடாற்காடு பகுதிக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்திலே ஒரு கிறிஸ்ட்டியன் மிஷன் மருத்துவமனை இருப்பதால் அங்கே கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது குறித்து தொடர்ந்து நாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். அது கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த இளம் பிள்ளை நோய்க்கு ஹோமியோபதி முறையிலே சிகிச்சை அளிப்பதற்காக கௌரவ மருத்துவராக திரு. வைத்தியநாதன் என்பவரை சேலம் மருத்துவமனையில நியமித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த சிகிச்சை முறையின் மூலம் இந்த இளம்பிள்ளைவாத நோய் தடுக்கப்படுகின்றதா ? அதிலே ஏதேனும் முன்னேற்றம் தெரிகின்றதா ? ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி அந்த சிகிச்சை முறை நல்ல பலனை அளித்திருப்பதாகத் தெரியவருகின்றது. ஆகவே அதனை மாநிலம் முழுவதும் விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி சிகிச்சை வேறு, தடுக்கக்கூடிய முறைகள், வேறு. (One is cure. As far as curative measures are concerned தமிழ் வைத்தியத்திலே இருக்கின்றது. அதிலேயும் ஆராய்ச்சி நடத்தி இருக்கிறார்கள். ஒரளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறோம் ஆனால் அந்த நோய்வராமல் தடுப்பதற்குரிய முறையினைப் பொறுத்தவரையிலே ஒரல் வேக்ஸினேஷனைத் தவிர வேறு எந்த முறையும் இந்தியாவிலே கையாளப்படவில்லை.